சுருக்கம்

**மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவ / மாணவிகளுக்கு முதன்மைத்தேர்வு எழுத நிதியுதவி அளித்தல் - 2021 - 2022-ஆம் ஆண்டிற்கு ரூ.19,50,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.**

---

<u>மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.2) த்துறை</u>

அரசாணை (நிலை) எண்: 05

நாள்: 21.03.2022
ஸ்ரீ பிலவ பங்குனி 07,
திருவள்ளுவர் ஆண்டு,2053

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.42, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.2)த் துறை, நாள்: 09.12.2016
2. அரசாணை (நிலை) எண்.50, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.2)த் துறை, நாள்: 26.12.2017
3. அரசாணை (நிலை) எண்.01, மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந.3.2) த்துறை, நாள் 28.02.2020.
4. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/ இயக்குநரின் கடித ந.க.எண்.3070 / பணியமர்த்தல் / 2021, நாள்: 02.09.2021 மற்றும் 07.01.2022.

********

<u>ஆணை:-</u>

பார்வை ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதற்கட்டமாக 2016-2017-ஆம் நிதியாண்டில் ஊக்கத் தொகையாக ரூ.50,000/- வீதம் 20 பயனாளிகளுக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காணும் திட்டத்தை 2017-2018ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்த திட்டத் தொடராணையும், 24 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ஏதுவாக ரூ.12,00,000/-க்கு நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக 77 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.38,50,000/- கூடுதல் நிதியொதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

4. பார்வை நான்காவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் / இயக்குநரின் கடிதத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்ட தொகுதி-I முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சியடைந்த மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட 120 நபர்களின் சான்றிதழ்களை ஆய்வு செய்த போது, 48 நபர்கள் மட்டும் ஊக்கத்தொகை பெறத் தகுதிவாய்ந்த நபர்களாக கருதப்படுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் 2021-2022-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.4,50,000/- மட்டும் பெறப்பட்டுள்ளது எனவும், ஊக்கத்தொகை பெறத் தகுதியுள்ள மேற்காணும் 48 நபர்களில், வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள ரூ.4,50,000/-னை 9 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது போக மீதமுள்ள 39 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.19,50,000/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) உரிய கணக்குத் தலைப்பில், திருத்திய மதிப்பீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், 2021-2022-ஆம் நிதியாண்டிலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சியடைந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியலில் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் எவரும் தேர்ச்சி பெறவில்லை என்பதால் இடம் பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலே பத்தி 4இல் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்/இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தினை 2021-2022-ஆம் நிதியாண்டில் செயல்படுத்தும் விதமாக ஊக்கத்தொகை பெற தகுதிவாய்ந்த 39 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.19,50,000/-யினை (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் 101 - மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் - BB - மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் - 312 - படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் - 09 - ஏனையவை".
(IFHRMS த.தொ.கு.2235 – 02 – 101 – BB - 31209)

7. மேலே பத்தி-5இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதி 2021-2022-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதல் பெற்ற அ.சா.கு.எண். 13999/ நிதி (ச.ந)/2022, நாள்: 19.03.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா,
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-05.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:-
நிதி (ச.ந)த் துறை, சென்னை-09.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாடு)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/3/22
பிரிவு அலுவலர்
21/03/2022